பக்கங்கள் 16 + 05

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 24 வெள்ளிக்கிழமை 09.08.2024 | அதிர்வு 08

## 35 இந்திய மீனவர்கள் ஒரே இரவில் சிக்கினர்

(ரஸீன் ரஸ்மின்)



இலங்கைக் கடற் பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 35 இந்திய மீனவர்கள் புத்தளம் – கற்பிட்டி வடக்கு குதிரமலை 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# ஹரின், மனுஷவின் எம்.பி. பதவி 'அவுட்'

## இருவரையும் ஐக்கிய மக்கள் சக்தி நீக்கியமை சட்ட ரீதியானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு

அரசு பக்கம் தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்ற ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரைக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் சட்ட ரீதியானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு காரண 04▶



# வெடுக்குநாறிமலை சர்ச்சைக்கு உயர்நீதிமன்றில் இணக்கத் தீர்வு



வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய பிரதேசம் தொடர்பான சர்ச்சைக்கு இன்று உயர் நீதிமன்றத்தில் இணக்கமான தீர்வு ஒன்று காணப்பட்டது.

மேற்படி ஆலயம் காணப்படும் பிர தேசத்தில் தொன்மையான மரபுரிமை சின்னங்கள் இருக்கின்றன என்று தெரி வித்து, அவற்றைப் பேணிப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் குறிப்பிட்டு, மூன்று பெரும்பான்மை இனத்தவர்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று விசாரணைக்கு வந்தன.

நீதியரசர்கள் ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஷிரான் குணரட்ண, அச்சல வெங்கப்புலி ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் எடுத்துக் கொள்ளப் 04▶







# நல்லூர் கந்தனுக்குக் கொடியேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திரளான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் சிவச்சாரியார்களின் வேத மந்திரங்கள் ஒலிக்க கொடியேற்றம் இடம்பெற்றது.

பெருமளவான பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு அங்கப்பிரதட்சணம் உட்பட பல்வேறு நேர்த்திகளில் ஈடுபட்டனர்.

செங்குந்த மரபினரால் வடிவமைக்கப்பட்ட கொடிச்சீலை பாரம்பரிய முறைப்படி நேற்று வேல் மடம் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சிறிய தேரொன்றில் எடுத்துவரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கையளிக்கப்பட்டது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள மகோற்சவத் திருவிழா தொடர்ந்து 25 நாட்களுக்கு இடம்பெறவுள்ளன.


அந்தவகையில் எதிர்வரும் ஆகஸ்ட் 31ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிக்கு சப்பரத் திருவிழாவும், செப்டெம்பர் முதலாம் திகதி காலை 6.15 மணிக்கு தேர்த்திருவிழாவும், அடுத்தநாள் செப்டெம்பர் 2ஆம் திகதி காலை 6. 15 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.











# மக்களின் பசி தீர்க்கவே சுயாதீனமாகப் போட்டி!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

மக்களின் பசி தீர்க்கவே ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேறுபாடின்றி சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'பெண்கள் எங்கள் பலம்' என்ற பெண்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, இலங்கையில் ஆண்களுக்குச் சமமாக, பெண்களின் உரிமைகள் வலுவூட்டப்பட்டு பாதுகாக்கப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



# சஜித் அணிக்கு இரு புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## மனுஷவின் வெற்றிடத்துக்கு பந்துல லால் பண்டாரிகொட

உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய வெற்றிடமாகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பந்துல லால் பண்டாரிகொடவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

அதேவேளை, வெற்றிடமாகியுள்ள தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் கட்சியின் உயர்பீடம் கூடி கலந்துரையாடல்களை நடத்தித் தீர்மானிக்கும் என்று ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

அரசு பக்கம் தாவிய அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரைக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் சட்டரீதியானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையிலேயே, ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் வெற்றிடமாகியுள்ளன.

மனுஷ நாணயக்கார தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானதுடன், ஹரின் பெர்னாண்டோ தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய மக்கள் சக்தியின்

# தவிசாளர் பதவியிலிருந்து பொன்சேகா இராஜினாமா!

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம். பி. இன்று இராஜினாமா செய்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற நிலையிலேயே, அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.



# கொழும்பில் கோர விபத்து! குடும்பஸ்தர் ஒருவர் சாவு!!

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொட்டலங்க சந்திக்கு அருகில் இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மேற்படி நபர் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பேலியகொடையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், முன்னால் பயணித்த சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் சைக்கிளில் சென்றவரும், மோட்டார் சைக்கிளில் சென்றவரும் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

சைக்கிளில் பயணித்தவர் வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்றபோது உயிரிழந்தார்.

பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரே இவ்வாறு உயிரி ழந்தார்.

சம்பவம் தொடர்பில் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஹரின்...

மாக இருவரும் நாடாளுமன்ற உறுப்புரி மையை இழந்துள்ளனர்.

மேற்படி இருவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகித்ததுடன், ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு ஆதரவளித்தனர்.

இதனையடுத்து ஹரின் பெர்னாண்டோ சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராகவும், மனுஷ நாணயக்கார தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வ ாய்ப்புகள் அமைச்சராகவும் நியமிக்கப் பட்டனர்.

இந்தநிலையில் ஐக்கிய மக்கள் சக்தி அவர்கள் இருவரையும் கட்சியின் உறுப் புரிமையிலிருந்து இடைநிறுத்தியிருந்தது.

இதற்கு எதிராக மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகி யோர், ஐக்கிய மக்கள் சக்தியின் இந்தத் தீர்மானத்தைச் செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடுமாறு கோரி உயர்நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனு இன்று உயர்நீதிமன்றத் தில் மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டபோது, ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானம் சட்ட ரீதியானது என்று தீர்ப்பளிக்கப்பட்டு மனு நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற் றும் செயலாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், விரான் கொரயா, ஜயம்பதி விக்ரமரத்தன மற்றும் சட்டத்தரணிகள் ஹெஜாஸ் ஹிஸ்புல்லா, சம்பத் விஜயவர்தன ஆகியோர் முன்னி லையாகி வாதிட்டார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு காரணமாக மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ளனர்.

இதையடுத்து ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தங்களது அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகுவதாக இன்று அறிவித்துள்ளனர்.

### வெடுக்குநாறிமலை...

பட்டன.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக் களில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப் பட்டுள்ள வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயப் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தர ணிகள் கனகேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

தொன்மையான மரபுரிமை இடங்கள், நிலையங்கள், சின்னங்கள் அங்கிருந் தாலும் வரலாற்றுக் காலத்தில் இருந்து அங்கு மேற்படி வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய வழிபாடு நடைபெற்று வருவதால் அதைக் தடுக்க முடியாது, தடுக்கக் கூடாது என்று இருவரும் வாதிட் டனர்.

மேற்படி தொன்மையான மரபுரிமை மையங்களுக்கு பாதிப்போ, சேதமோ ஏற்படுத்தாமல் இரண்டு தரப்பினரும் தங்கள் வழிபாடுகளை தடையின்றி முழு அளவில் ஆற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற இணக்க ஏற்பாட்டை நீதிமன்றம் வழங்கியது.

இவ்விடயத்தை ஒட்டி வவுனியா நீதி மன்றத்தில் உள்ள பல்வேறு வழக்குகளுக் கும், இன்று உயர்நீதிமன்றத்தில் ஏற் பட்டுள்ள இந்த இணக்க ஏற்பாட்டை தெரி வித்து, அதன் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு சட்டமா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

### 35 இந்திய...

கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் நேற்று வியாழக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு படகுகளில் வருகை தந்த இந்திய மீனவர்கள் கற்பிட்டி வடக்கே குதிரமலைப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினரால் இந்த 35 மீனவர் களும் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி இந்திய மீனவர்கள் பயணித்த நான்கு விசைப் படகுகளும், மீன்பிடிப்ப தற்காக பயன்படுத்தப்பட்ட மீன்பிடி உள்ளிட்ட சில உபகரணங்களும் கடற்ப டையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 35 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக கற்பிட்டி பிரதேச கடற் றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப் புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் கடந்த திங்கட்கிழமை குதிரமலைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 44 இந்திய மீன்பிடி படகுகளைக் கைப்பற்றியுள்ள துடன், 322 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.




# மன்னாரில் இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பான சுகாதாரத்துறை விசாரணைகள் திசை திருப்பப்படுகின்றன

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றச்சாட்டு

(ஜோசப் நயன்)

கடந்த வாரம் மன்னார் பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள், தாதிய உத்தியோகஸ்தர்களின் கவனயீனத்தினால் மரணம் அடைந்த தம்பனைக்குளத்தை சேர்ந்த இளம் தாயின் மரணம் தொடர்பிலான விசாரணைகள் திசை திருப்பப்படுகின்றன எனவும், குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்

இன்றைய தினம் வெள்ளிக்கிழமை பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிந்துஜாவின் மரணம் நிகழ்ந்து ஏறக்குறைய 11 நாள்க நிறைவுற்றுள்ளன். இன்னும் பூர்வாங்கமான அறிக்கை வெளிவரவில்லை. ஆனாலும் இவர்கள் விசாரணைகளை வேறு கோணத்தில் திசைதிருப்புவதாக நம்பதகுந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

மன்னார் வைத்தியசாலையின் விசாரணை அறிக்கையும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அறிக்கையும், கள அறிக்கையும் ஒரு விடயத்தை செல்ல மாகாண சுகாதார அமைச்சின் விசாரணை இன்னொரு விதமாகக் காணப்படுவதாகத் தெரிகின்றது.

குறிப்பாக மாகாண சுகாதார அமைச்சின் அறிக்கை இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அல்லது சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்க கூடியவர்களை - அதிகாரமிக்கவர்களை




- காப்பாற்றுவதாகவே அமைந்துள்ளதாக நம்பதகுந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு குடும்பநல உத்தியோகஸ்தர்கள், இரண்டு தாதிய உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஒரு வைத்தியரைத் தண்டிப்பதாகக் காட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே விசாரணைகள் ஒரு குறுகிய அளவிலே முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது சம்பந்தப்பட்டவர்களை இடை நீக்கம் செய்யாது, வெறுமனே இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளே வைத்தியசாலை தரப்பாலும் மாகாண சுகாதார அமைச்சாலும் முன்னெடுக்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட 5 நபர்களுக்கும் இன்றைய தினம் இடம் மாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் அறியகூடியதாக உள்ளது.

நீதியான விசாரணை செய்வதாக மக்களுக்கு கூறிவிட்டு சாதாரண இடமாற்றத்தையே செய்கின்றனர். நீதியான விசாரணை இடம் பெறவில்லை. எனவே நீதியான விசாரணை இடம் பெற வேண்டும். குற்றம் இழைத்தவர்கள் வைத்திய துறையில் இருந்தே நீக்கப்படவேண்டும் என பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக கோரிக்கை விடுக்கிறோம்.

அதை விடுத்து சாதாரண இடமாற்றம் என்பதை பொது அமைப்புக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளபோவதில்லை. இவ்வாறு செய்வதனால் இவர்களுக்கு எதிராக மிகப்பெரிய அளவிலே போராட்டம் ஒன்றை மேற்கொள்ள எங்களை வைத்திய தரப்பினர் நிர்பந்திக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துகொள்கிறோம்.

தொடர்சியாக நாங்கள் வைத்தியசாலை மற்றும் சுகாதார துறையினருடப் பேசி வருகின்றோம். இந்த மரணம் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பிலும் பேசியிருக்கின்றோம். நீதியை வழங்குவதில் இருந்து நீங்கள் பின்வாங்கினால் வைத்தியசாலைக்கும் மாகாண சுகாதார அமைச்சுக்கும் எதிராக எங்கள் செயற்பாடுகள் இருக்கும் என்பதை தெளிவாக உரியவர்களிடம் தெரிவித்துள்ளோம். எனவே இந்த விடயத்தில் நாங்கள் தொடர்ந்து விழிப்போடும் நீதிக்காகவும் காத்திருக்கிறோம். - எனப் பொது அமைப்புக்களின் தலைவர் சிவகரன் சுட்டிகாட்டியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பயனற்ற நீதித்துறை

அமைச்சர்கள் ஹரின் பெனாண்டோ, மனுஷ நாணயக்கார இருவரையும் ஐக்கிய மக்கள் சக்தி தனது கட்சியிலிருந்து வெளியேற்றியமை சரியானதே என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் இருவரும் எம்.பி. பதவிகளை இழக்கின்றனர். அதனால் அமைச்சர் பதவிகளையும் பறி கொடுக்கின்றனர்.

பதவிகளுக்காக கட்சி மாறி, கட்சிக்கும் தம்மை தெரிவு செய்த மக்களுக்கும் துரோகம் இழைப்போருக்கு உயர் நீதிமன்றம் மீண்டும் சாட்டையடி - சம்மட்டி அடி - கொடுத்திருக்கின்றது, நீதி நிலைநாட்டப் பட்டிருக்கின்றது என்றெல்லாம் இத்தீர்ப்பு குறித்து கூறப்பட்டாலும், அவற்றுக்கு அப்பாலும் இந்தத் தீர்ப்பில் பெரும் குறை இருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு முடிந்து ஆறரை மாதங்களின் பின்னர் இப்போதுதான் சாவகாசமாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அதுவும் இந்த வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்களில் ஒருவர் இந்த மாதத்தில் ஓய்வு பெற்று செல்ல வேண்டிய கட்டாயம் இருப்பதன் காரணமாக இதுவரை அவர் விசாரித்து முடித்து நிலுவையில் நிற்கும் வழக்குகளின் தீர்ப்புகள் விழுந்தடித்து வழங்கப்படுகின்றன. அந்த வரிசையில் இந்தத் தீர்ப்பும் இப்போது வந்திருக்கின்றது. இல்லையேல் தீர்ப்பு இன்னும் எவ்வளவு காலம் இழுபட்டிருக்குமோ - இந்த இரண்டு பேரும் எம்.பிக்களாகவும் அமைச்சர்களாகவும் இன்னும் தொடர்ந்து இருந்திருப்பார்களோ - ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

இத்தகைய சர்ச்சைகளில், எம்.பிக்களை கட்சிகள் வெளியேற்றியமை தொடர்பில், சம்பந்தப்பட்ட எம்.பி. உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்ய ஒரு மாதமும், அதை விசாரித்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்க இரண்டு மாதங்களும் மட்டுமே அரசமைப்பு காலக்கெடு கொடுத்து ஒழுங்கு செய்திருக்கின்றது. தவறான ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேல் நீண்ட காலம் மக்கள் பிரதிநிதியாக இருக்கக் கூடாது என்ற ஏற்பாட்டில்தான் இந்த ஒழுங்கு விதி.

இந்த இருவரும் - ஹரீனும் மனுஷவும் - கட்சி மாறி முறையற்ற விதத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தவறாகப் பதவியில் தொடர நமது நீதி முறைமை அனுமதித்திருக்கின்றது.

இருவரும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது ஐக்கிய மக்கள் கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவி அமைச்சர்களானவர்கள். கோட்டாபய ராஜபக்ஷ பதவியையும் நாட்டையும் விட்டு ஓடிய போது அமைச்சர் பதவிகளை இழந்த அவர்களுக்கு மீண்டும் அதே அமைச்சுகளை வழங்கினார் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

கட்சி மாறி பதவியேற்றமைக்காக 2022 மேயில் ஐக்கிய மக்கள் சக்தி அவர்களை கட்சியிலிருந்து இடை நிறுத்தியது. பின்னர் கட்சியின் முறையான ஒழுக்காற்று விசாரணைகளை அடுத்து ஓராண்டு கழித்துத்தான் - 2023 ஜூலையில்தான் - இருவரையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் முடிவை ஐக்கிய மக்கள் சக்தி எடுத்தது.

அந்த முடிவுக்கு எதிராக இருவரும் தாக்கல் செய்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் இந்த ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி விசாரணைகளை முடித்துக் கொண்டது.

எனினும், ஆறரை மாதங்கள் தாமதித்து, விசாரணை செய்த நீதியரசர்களில் ஒருவர் ஓய்வில் செல்ல இருக்கையில், தேங்கிக் கிடந்த அவர் சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைந்து முடித்துத் தள்ளும் வேக வரிசையில் இந்த வழக்· இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

நீதித்துறைக்கு வேலைப்பளு என்ற என்பது உண்மை. அதை சுமுகமாக தீர்ப்பதற்கான மாற்று வழிகளை ஆட்சி தரப்புடன் கலந்தாய்ந்து நீதித்துறை எடுக்க வேண்டும்.

அதை விடுத்து, ‘தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்’ என்ற நீதித்துறையின் மகா வாசகத்தை புரிந்து கொண்டும், அதையே தொடர அனுமதித்து உயர் நீதிமன்றம் பார்த்திருப்பது இலங்கையில் நீதித்துறைக்கே இழுக்கு.

அதுவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த - மக்களின் இறைமை பற்றிய - விடயங்களை அர்த்தப்படுத்துகின்ற இது போன்ற விவகாரம் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கை விசாரித்து முடித்துவிட்டு ஒரு திருப்பகரமான தீர்ப்பை ஆறரை மாதங்கள் காலத்தை இழுத்தடித்து வழங்குகின்றமை நீதித்துறைக்கு அவமானகரமான செயல்.

தாமதங்கள் காரணமாக இலங்கையில் நீதித்துறை மறுக்கப்படும் நீதித்துறை ஆகிவிட்டது என்ற அவப்பெயர் தொடர்ந்து நீடிக்காமல் நீங்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.









# தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை தொடர்பான செயலமர்வு திருமலையில்

**(ஹஸ்பர், எச். எம். ஹலால்தீன்)**

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை தொடர்பிலான செயலமர்வு திருகோணமலை மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற செயலமர்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி மற்றும் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன் கலந்து கொண்டு ஆரம்ப உரையை முன்வைத்தனர்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் மற்றும் சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இதில் வளவாளராக மாவட்ட உள சமூக உத்தியோகத்தர்கர் எம். எம். சம்சீத், மூதூர் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சாபி மற்றும் பதில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எஸ். ரியால், கிண்ணியா பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஹஸ்மி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றிவரும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், கல்வி திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலை குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

லண்டனில் இருந்து வருகைத் தந்த சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜியுடன் சங்கராஜி நினைவு அறக் கட்டளையின் செயலாளர் ஏ.கமலா நந்தன், அதன் மத்திய மாகாண இணைப்பாளர்களான ராஜ்குமார், ஆமஸ்ரோங் ஆகியோர் தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலைக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது பாடசாலையில் நிலவும் குறைபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர்கள் அங்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை ஸாஹிறா கைப்பந்து அணி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவானது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பந்து போட்டியில் கல்முனை ஸாஹிறாவின் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் வென்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

வெற்றிபெற்ற அணியினரை பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர்.






# நுவரெலியா அதி கஷ்டப் பிரதேச பாடசாலை தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிக்குத் தகுதி!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மத்திய மாகாணத்தின் 15 கல்வி வலயங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மாகாணமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 45 அணிகள் பங்குபற்றின.

இந்தப் போட்டியில் நுவரெலியா கிரேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலய அணி கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இந்தப் பாடசாலை நுவரெலியா கல்வி வலயத்தில் காணப்படும் அடிப் படை வசதிகள் எதுவுமற்ற அதிகஷ்டப் பிரதேச பாடசாலை என்பது குறிப் பிடத்தக்கது.

# கிழக்கில் வீதி விபத்துகளை குறைத்தல் தொடர்பில் விழிப்புணர்வுச் செயலமர்வு





**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் வீதி விபத்துகளை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு மட்டக்க ளப்பில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சினது காயம் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகின் கிழக்கு மாகாணத்துக்கான மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்குமாகாண வைத்தியசாலைகள் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, அம்பாறை பிராந்தியங் களின் சுகாதார பணிப்பாளர் பணிமனை அதிகாரிகள் கலந்து பங்குபற்றிய இந்த மீளாய்வுக் கூட்டமானது புதன்கிழ மையன்று மட்டக்களப்பு பிராந் திய சுகாதார சேவைகள் பணிமனை யின் கேட்போர் கூடத்தில் இடம்பெற் றது.

வரவேற்புரை நிகழ்த்திய மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன் வீதி விபத்துக்கள் மற்றும் காயங்கள் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பொதுமக் களுக்கான விழிப்புணர்வுகளை விரிவு படுத்தல் போன்ற செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் வீதி விபத்துக்களை குறைப்பதுடன், சுகாதார சேவைகளுக்கான நிதி மற்றும் வேலைப் பழுவைக் கட்டுப்படுத்த முடியும் என்றார்.

இதைத் தொற்றா நோய்களுக் கான மட்டக்களப்பு பிராந்திய வைத் திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமார் ஒருங்கிணைத்து நடத்தினார்.

காயத்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வைத்தியக் கலாநிதி சமிதா சிறிதுங்க கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் காயம் தடுப்பு சிகிச்சைகளில் பங்க ளிக்கும் விதம் மற்றும் தரவு நுளைவு அறிக்கைள் போன்றவற்றை விவ ரித்திருந்தார்.

தொடர்ந்து, மாகாண வைத்திய சாலைகள் தங்களது தங்களின் தரவுகள் அடிப்படையிலான செயற்பாடு களையும் முன்வைத்து விவரிப்புக்களை மேற்கொடிருந்தனர்.

சுகாதாரத்துறையுடன் ஏனைய பொலிஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாநகர சபை, பாடசாலைகள் ஏனைய அரசு சாரா நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளல் வீதி விபத்து அதிகம் நடைபெறும் இடங்களை கண்காணித்து கூடிய கவனம் செலுத் தல் என்பன பற்றியும் திட்டமிடப்பட்டது.

மாகாண மற்றும் அமைச்சு அதி காரிகளிடையே காயம் தடுப்பு நோக் கில் காத்திரமான உரையாடல்கள் கருத் துப் பரிமாற்றங்களுடன் நடைபெற்றது.

# சம்மாந்துறை வீரத்திடல் அல் ஹிதாயாவில் வெற்றியளித்துள்ள பாடசாலைத் தோட்டம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைத் தோட்டம் வெற்றியளித்துள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம். முனாஸிர் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் மாணவர்களது மனப்பாங்கு விருத்தியின் ஆற்றல்கள் மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளித்து அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகள் அண்மையில் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.







# மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியில் மாணவர்களின் ஆற்றுகைச் சாரல் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மாளிக்கைகாடு அல் ஹுசைன் வித்தியாலய தரம் 11 மாணவர்களின் ஏற்பாட்டில் மாணவர்கள் மத்தியில் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாணவ மன்றம் ஆற்றுகைச் சாரல் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலைஅதிபர் ஏ. சீ. எம். நளீம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அதிபர் திருமதி.ரிஸ்லியா உவைஸ், ஒழுக்காற்று சபை தவிசாளர் மௌலவி எம்.எஸ். சாதிக், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பாடசாலை கலாச்சார குழுவின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வை ஒழுக்காற்று சபை செயலாளர் ஏ.எம்.எம்.ரஜி ஆசிரியரோடு இணைந்து ஆசிரியை ஆர். ரஸ்மியா, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம். ஜஸாத் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர்.



# மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை துரிதப்படுத்துங்கள்

## இம்ரான் எம்.பி. கோரிக்கை



(ஹஸ்பர்)

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை துரிதப்படுத்துமாறு திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபில்யூ.ஜி.திசாநாயக்கவைக் கேட்டுள்ளார்.

ஏற்கனவே விண்ணப்பம் கோரப்பட்ட நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டுத் தகுதியானவர்களிடம் இருந்து கடந்த ஜூன் மாதம் விண்ணப்பம் கோரப்பட்டது. இதன் அடிப்படையில் சிலர் விண்ணப்பித்துள்ளனர் என்று அறிய முடிகின்றது.

எனினும் இதுவரை இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படவோ அல்லது இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான வேறு நடவடிக்கைகளோ முன்னெடுக்கப்படவில்லை என மூதூர் கல்விச் சமூகம் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத் தாமதமானது சமூகங்களிடையே வீண் சந்தேகங்களைத் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைவதால் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அவசியமாக உள்ளது.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே இந்த வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பம் கோரியிருப்பதாலும் இது வழமையான நிர்வாக நடைமுறை என்பதாலும் இதனை முன்னெடுப்பது தேர்தலுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

எனவே, பொருத்தமான ஒருவரை மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை முன்னெடுங்கள்.- என்றார்.



# தலவாக்கலையில் பாடசாலைகளுக்கு கணினிகள், விளையாட்டு உபகரணம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக தலவாக்கலை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் சிலவற்றுக்கு கணினிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் தலவாக்கலை விடுதியில் நடைபெற்றது. இதன்போது சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜி, அதன் செயலாளர் ஏ.கமலாநந்தன், அதன் மத்திய மாகாண இணைப்பாளர்களான ராஜ்குமார், ஆமஸ்ரோங் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கடினப் பந்துத் தரை விரிப்பை வழங்கிய சாணக்கியன் எம்.பி.

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு களுவன்கேணி இளங்கோ விளையாட்டு கழகத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கடின பந்து தரை விரிப்பை வழங்கி வைத்தார்.

இளங்கோ விளையாட்டுக் கழகத்தினரின் நீண்டநாள் தேவையாக இருந்த இந்த தள விரிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டது.

# சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா!









**(வி.ரி. சகாதேவராஜா)**

பாண்டிருப்பில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் இந்த விழாவை நடத்தியது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் கே.அருண்குமார் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை வலையக்கல்வி பணிமனையின் இந்து சமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், மற்றும் திருமதி புண்ணிய மலர் அம்மையார், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா.ஸ்ரீபிரியா, சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப் படங்களைச் சமயப் பற்றாளர் மகேந்திரன், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்தப் பணி மன்றத்துக்கு வழங்கி வைத்தார்.

இதனைப் பாடசாலைகளுக்கு மன்ற உறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கி வருகின்றனர். ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டார்.



# கிழக்கின் சுற்றுலா மையம் பயிற்சித் திட்டம் ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சிந்தனையில் கிழக்கிலங்கையில் வசிக்கும் சுற்றுலாத்துறையில் ஆர்வமிக்க இளைஞர் யுவதிகளுக்கு "கிழக்கின் சுற்றுலா மையம்" என்னும் பயிற்சி திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி யின் செயற்குழு தலைவரும் "கிழக்கின் சுற்றுலா மையம்" என்னும் கருப்பொருளை ஜனாதிபதி மட்டத்துக்கு எடுத்துச்சென்றவருமான மோகன் கணபதிப்பிள்ளை பங்குபற்றி இருந்தார்.

நிகழ்ச்சித் திட்டத்தில் 150 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றி இருந்தனர். அவர்களுக்கான விரிவுரைகள் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க விரிவுரையாளர்களை கொண்டு நடத்தப்பட்டது.

கிழக்கின் சுற்றுலா மையம் செயற்றிட்டமானது இலவசமாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது கிழக்கிலங்கையின் சுற்றுலா துறை முன்னேற்றம் மற்றும் அந்நிய செலாவணியை அதிகரிக்க வழிவகுப்பதோடு அவர்களின் தொழில் மற்றும் வருமானத்தை அதிகரிக்க செய்வதையும் தொழில் அங்கத்துவத்தை வழங்குவதையும் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கிழக்கின் சுற்றுலா மையம் சுற்றுலா வழிகாட்டிக்கான உத்தியோகபூர்வ அடையாள அட்டை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள கட்டாக்காலி மாடுகளை பிடிப்பது யார்?

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில் திரியும் கட்டாக்காலி மாடுகள், நாய்களால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட வீதிகளில் சுற்றித் திரியும் இவ்வாறான கட்டாக்காலிகளால் அடிக்கடி விபத்துக்கள் மற்றும் பொதுமக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கு சிரமம் ஏற்பட்டு வருகின்றது.

கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளருக்கு பலதடவைகள் உரிய தரப்பினரால் தெரிவிக்கப்பட்ட போதும் அவர்கள் இதில் அக்கறை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளான பிரதேச செயலங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள் பொதுப் போக்குவரத்து பகுதிகளில் இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் சர்வ சாதாரணமாக திரிகின்றன. வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைந்துள்ளமையால்



கட்டாக்காலி மாடுகள் ஆடுகள் பிரதான வீதிகளை ஆக்கிரமித்து சுதந்திரமாக திரிகின்றன.

எனவே, கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் அவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களிடம் இருந்து தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இந்தப் பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள், ஆடுகள், நாய்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. இதனால் இவ்வீதியில் பயணம் செய்யும் வாகனங்கள் விபத்துகளுக்கு உள்ளாகி வருகின்றன.

இக்கட்டாக்காலிகள் பிரதானவீதிகள், பொதுச் சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் நடமாடுகின்றன.

அத்துடன் இரவு நேரங்களில் பெரும் எண்ணிக்கையிலான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நகரை ஆக்கிரமித்து அசுத்தப்படுத்தி வருவதும் துர்வாடை வீசுவதும் வர்த்தகர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அவற்றைக்கைப்பற்றிஉரிமையாளர்களிடம் உரிய தரப்பினர் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. இதனைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



## வயநாடு மீட்புப் பணியிலிருந்து விடுபடும் இராணுவத்துக்கு பிரதேச மக்கள் உற்சாக

# வழியனுப்பல்!

வயநாடு நிலச்சரிவில் சிக்கியோரை மீட்கும் பணில் ஈடுபட்டு வந்த இராணுவத்தினரில் பெரும்பாலானோர் குறித்த பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு குறித்த பிரதேச மக்கள் உற்சாகமாக வழி அனுப்பி வைத்துள்ளனர்.

கேரள மாநிலம் வயநாட்டில் கடந்த 30ஆம் திகதி நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் முண்டக்கை, சூரல் மலை, மேப்பாடி உள்ளிட்ட கிராமங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லபட்டன. நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 400ஐ கடந்தது.

வயநாடு நிலச்சரிவைத் தொடர்ந்து இந்திய இராணுவம், துணை இராணுவப் படைகள், கடற்படை, தேசிய பேரிடர் மீட்புப்படை, காவல்துறை உள்ளிட்டோர் மீட்பு – தேடுதல் பணியில் கடந்த ஒன்பது நாட்களாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் மீட்புப்பணியில் ஈடுபட்டு வரும் இராணுவத்தினரில் பெரும் பகுதியினர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இராணுவ அதிகாரிகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் முகமது ரியாஸ் நினைவுப் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

மீட்பு பணிகளில் ஈடுபட்டு திரும்பும் இராணுவ வீரர்களுக்கு குடியிருப்பு வாசிகள் கைதட்டி உற்சாகம் எழுப்பினர்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்படுகிறது.

## மக்களவையில் ராகுல் நித்திரை

## ப.ஜ.க. எம்பிக்கள் சிரிப்பு!



மக்களவையில் எதிர் வரிசையில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கண்களை மூடித் தூங்கும் நிலையில் அமர்ந்திருந்தார். இதனைப் பார்த்த பா.ஜ.க. எம்.பிக்கள் சிரித்துத் தள்ளியுள்ளனர்.

நாடாளுன்றத்தில் நேற்று நடத்த மக்களவைக் கூட்டத்தில் வக்பு சட்டத் திருத்த மசோதாவை தாக்கல் செய்து மத்திய நாடாளுமன்ற மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்கள்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு உரையாற்றிக்கொண்டிருந்தார்.

அப்போது எதிர்வரிசையில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, கண்களை மூடித் தூங்கும் நிலையில் அமர்த்திருந்தார். இதனைப் பார்த்த கிரண் ரிஜிஜு தனது உரையைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு ராகுல் காந்தி தூங்குவதைச் சுட்டிக்காட்டினார்.

உடனே, கிரண் ரிஜிஜுவுக்கு அருகில் அமர்ந்திருந்த பூபேந்திர யாதவ், ஜிதேந்திர சிங் உள்ளிட்ட பா.ஜ.க. எம்.பிக்கள் சிரிக்கத் தொடங்கினர்.

ராகுல் காந்தி தூங்கும் நிலையில் உள்ள அந்த வீடியோவையும் புகைப் படத்தையும் பா.ஜ.க. மற்றும் வலதுசாரி அமைப்புகள் சமூக வலைதளங்களில் பகிர்ந்து கேலி செய்து வருகின்றன.



ராகுல்காந்தி கண்களை மூடியபடி அமர்ந்திருந்தாரா அல்லது தூங்கிக் கொண்டிருந்தாரா என்பது உறுதி செய்யப்படவில்லை.



## பங்கரவாத தாக்குதல் அச்சம்;

# இசை நிகழ்ச்சி ரத்து!

பயங்கரவாத தாக்குதல் அச்சம் காரணமாக ஆஸ்திரியாவில் நடைபெறவிருந்த அமெரிக்காவின் பிரபல பாடகி டெய்லர் ஸ்விப்டின் இசை நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பாடகி டெய்லர் ஸ்விப்டின் இசை நிகழ்ச்சி ஆஸ்திரியாவில் நேற்று (08) முதல் 3 நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இந்நிலையில் டெய்லர் ஸ்விப்டின் இசை நிகழ்ச்சியில் தாக்குதல் நடத்த பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய இருவர் சதித் திட்டம் தீட்டியதை பொலிஸார் கண்டுபிடித்தனர். இதையடுத்து அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இசை நிகழ்ச்சியில் இரசாயன தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இருந்தனர் எனத் தெரியவந்துள்ளது. அவர்களிடம் பல்வேறு இரசாயனங்கள் மற்றும் பொருள்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். அவை வெடிபொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுபவையாகும்.

இந்நிலையில் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக டெய்லர் ஸ்விப்டின் இசை நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்படுகிறது என நிகழ்ச்சி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறும்போது,

'எர்ன்ஸ்ட் ஹாப்பல் ஸ்டேடியத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டமையை அரச அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இதனால், அனைவரின் பாதுகாப்பிற்காகவும் இசை நிகழ்ச்சியை ரத்து செய்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை." என்று கூறினர்.




## பூமி திரும்ப முடியாத நிலையில் சுனிதா, புட்ச்

## கிறிஸ்துமஸ், புத்தாண்டுக்கும் விண்வெளியில்

# இருவரையும் அழைத்துவர நாசா பிரயத்தனம்

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (58), மற்றொரு வீரரான புட்ச் வில்மோர் (61) ஆகியோர் கடந்த மாதம் 5ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலன் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றனர். அங்கு அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் திட்டமிட்டபடி கடந்த 22ஆம் திகதி பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஹீலியம் வாயுக்கசிவு மற்றும் உந்துவிசை கருவியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்குத் திரும்புவதில் சிக்கல் உருவானது. இதனால் நாசா விஞ்ஞானிகள் கவலை அடைந்தனர்.

இந்தப் பிரச்சினையால் கடந்த 50 நாட்களுக்கு மேலாக விண்வெளியில் சிக்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களை அழைத்து வர ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உதவியை நாசா நாடியுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் கேப்சூல் எனப்படும் விண்கலன் உதவியுடன் அவர்களை அழைத்து வர உள்ளனர். 4 வீரர்கள் அடங்கிய குழுவுடன் விண்வெளிக்குச் செல்லும் இந்த டிராகன் விண்கலன் அடுத்த ஆண்டு பெப்ரவரியில்தான் பூமிக்கு திரும்பும் என்று கூறப்படுகிறது.

இதற்கான திட்டமிடல் பணிகள் அடுத்த மாதம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இருவரும், கிறிஸ்துமஸ் (2024) மற்றும் புத்தாண்டைக்கூட (2025) விண்வெளியில் கழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஜுன் மாதம் பூமியிலிருந்து சென்றவர்கள் 8 மாதம் கழித்தே பூமிக்குத் திரும்புவதால் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தயார் செய்துவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என நாசா தெரிவித்துள்ளது.

பக்கங்கள் 05

கனடா முரசு

வெள்ளிக்கிழமை 09/08/2024

## பொலிஸ் அதிகாரி விபத்தில் காயம்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட்09 டொரன்டோ பொலிஸ் அதிகாரி காயமடைந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவர் மீது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் இவர் C2







# ஒலிம்பிக்கில் கனேடிய விளையாட்டு வீரர்கள் பலரும் வயிற்று உபாதை பாதிப்பால் அவஸ்தை

ஒலிம்பிக்கில் கலந்துகொண்ட கனேடிய விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு வயிற்று உபாதை ஏற்பட் டுள்ளதால், போட்டிகளில் கலந்து கொள்வதில் அவர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, ஓட்டப்பந்தயம் மற்றும் சைக்கிள் பந்தயங்களில் கலந்து கொண்ட பல வீரர் வீரங்கனைகளுக்கு வயிற்று உபாதைகள் ஏற்பட்டுள்ளன. C2



# பரிஸ் ஒலிம்பிக்கில் கனடாவுக்கு இதுவரையில் 21 பதக்கங்கள்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட்09 2024 பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனடா மற்றுமொரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

பெண்களுக்கான 57 கிலோகிராம் டேய்க்வுன்டோ போட்டியில் கனடா நேற்று வெண்கலப் பதக்கத்தை வென்றது.

வின்னிபெக் நகரைச் C2



# ஜப்பானில் நேர்ந்த நிலநடுக்கத்தினால் கனடாவுக்கு சுனாமி அபாயம் இல்லை

பிரிட்டிஷ் கொலம்பியா, ஒகஸ்ட்09

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் சுனாமி அபாயம் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் பதிவான பாரிய நில நடுக்கம் காரணமாக சுனாமி அபாயம் ஏற்படக்கூடுமென அச்சம் வெளியிடப்பட்டது.

எனினும், பிரிட்டிஷ் கொலம்பியாவிற்கு சுனாமி அபாயம் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் தேசிய சுனாமி மையம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் தென் பகுதியில் சுமார் 7.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நில நடுக்கத்தைத் தொடர்ந்து கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

நில நடுக்கத்தினால் 9 பேர் கயாமடைந்திருந்தனர் எனவும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நில நடுக்கத்தினால் சுமார் ஒன்றரை அடி உயர சுனாமி அலைகள் ஏற்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ரொறன்ரோவில் இருவர் காயம்

ஒன்ராரியோ, ஒகஸ்ட்09

ரொறன்ரோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

ரொறன்ரோவின் மவுன்ட் டென்னிஸ் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவத்தில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

வாகனமொன்றில் இருந்தவர்கள் மீது மற்றுமொரு வாகனத்தில் வந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பெண்ணுக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் பற்றிய ஆள் அடையாள விவரங்கள் எதுவும் இதுவரையில்




வெளியிடப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் பொலிஸ் அதிகாரிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஒலிம்பிக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக கனேடிய விளையாட்டு வீரர்கள் அமைப்பு சமூக ஊடகம் ஒன்றில் வெளியிட்டுள்ள செய்தியில், sprint என்னும் குறைதூர ஓட்டப்பந்தய வீராங்கனையான Zoe Sherar, 400 மீற்றர் பந்தயத்தில் கலந்துகொள்ளும் முன் வைரஸ் ஒன்றின் தொற்றால் ஏற்பட்ட வயிற்று உபாதையால் பாதிக்கப்பட்டார்.

ஆகவே, அவரால் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அவர் இன்று வெள்ளிக்கிழமை 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் கலந்து கொள்ளவேண்டியுள்ளது.

விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மட்டுமல்ல, பயிற்சியாளர்கள் உட்பட சுமார் 10 முதல் 15 பேர் வயிற்று உபாதையால் பாதிக்கப்பட்டுள்ளனர் Zoe தெரிவித்துள்ளார்.

அவரைப்போலவே, மூன்று முறை 100 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் கனடா அளவில் சம்பியன் பட்டம் பெற்றவரான Michelle Harrisonம் முதன் முறையாக ஒலிம்பிக்கில் கலந்து கொண்டுள்ளார். அவரும் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார்.

மேலும்,குறைதூர ஓட்டப்பந்தய வீரரான Aaron Brown, மற்றும் நடைப் போட்டி வீரரான Evan Dunfee ஆகியோரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன், கனேடிய சைக்கிள் பந்தய வீரர்கள் அணியும் நோய்த்தொற்றுக்கு ஆளாகியுள்ளார்கள்.

உணவு மற்றும் தண்ணீர் மூலம் பரவக்கூடிய Campylobacter jejuni என்னும் பாக்டீரியாவே பிரச்சினைக்குக் காரணம் என கண்டறியப்பட்டாலும், அந்த பாக்டீரியா எப்படி விளையாட்டு வீரர்களை தொற்றியது என்பது தெரியவரவில்லை.

## பரிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த 25 வயதான ஸ்கைலர் பார்க் வெண்கலப் பதக்கம் வென்றார்.

2024 பரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடா இதுவரை ஆறு தங்கம், ஐந்து வெள்ளி, பத்து வெண்கலம் என மொத்தம் இருபத்தியொரு பதக்கங்களை வென்றுள்ளது.



# இஸ்ரேலில் இருந்து தன் இராஜதந்திரிகளின் குடும்பத்தவரை வெளியேற்றுகின்றது கனடா!

ஒன்ராரியோ, ஓகஸ்ட்09

இஸ்ரேலில் இருந்து தனது இராஜதந்திரிகளின் குழந்தைகளையும் அவர்களின் பாதுகாவலர்களையும் வெளியேற்ற கனடிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கனடிய இராஜதந்திரிகளின் குழந்தைகள், அவர்களின் பாதுகாவலர்களை பாதுகாப்பான மூன்றாவது நாட்டிற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளதாக கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் போர் குறித்த அச்சத்திற்கு மத்தியில் இந்த முடிவை கனடிய அரசாங்கம் எடுத்துள்ளது.

ஆனாலும் தூதரக ஊழியர்கள் இஸ்ரேலில் இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

டெல் அவிவில் உள்ள இஸ்ரேலுக்கான கனடா தூதரகம், பெய்ரூட்டில் உள்ள லெபனானுக்கான கனடா தூதரகம், பாலஸ்தீனிய அதிகாரத்திற்கான கனடாவின் பிரதிநிதி அலுவலகம் ஆகியவை முழுமையாக செயல்பட்டு, தூதரக சேவைகள் உட்பட கனடியர்களுக்கு அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து வழங்குகின்றன என கனடிய வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுகிறது

ஆயுத மோதல் காரணமாக தோன்றியுள்ள கணிக்க முடியாத பாதுகாப்பு நிலைமை காரணமாக இஸ்ரேலுக்கான அனைத்து பயணங்களையும் தவிர்க்குமாறு கனடியர்களை அரசாங்கம் கடந்த சனிக்கிழமை எச்சரித்தது.

மேற்குக் கரை, காசா பகுதி, ஜெருசலேம், லெபனான் ஆகியவற்றுக்குப் பயணம் செய்வதற்கு எதிராகவும் கனடிய அரசாங்கம் அறிவுறுத்துகிறது.



# கனடாவின் முன்னாள் ஐ.நா. அதிகாரி ஒருவர் உளவு பார்த்த குற்றச்சாட்டில் சுவிஸில் கைது

ஒன்ராரியோ, ஓகஸ்ட்09

கனடாவின் முன்னாள் ஐ.நா. அதிகாரி சீனாவுக்கா உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சுவிட்சர்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தற்போது வட கொரியாவுக்காக பணிபுரியும் கனடிய முன்னாள் ஐ.நா அதிகாரியே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஐம்பது வயது மதிக்கத்தக்க கனடியர், சுற்றுச்சூழல் ஆலோசகராக தனது பணிக்காக சீனாவுக்கு பயணம் செய்து வந்தமை தெரியவருகிறது.

2021 முதல் ஆரம்பமான விசாரணைகளை தொடர்ந்து, உளவு பார்த்ததார் என்ற சந்தேகத்தின் பேரில் சுவிஸ் அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர்.

சுவிஸ் அதிகாரிகள் விசாரணையில், அவர் சீனாவின் சார்பாக பணியாற்றுவது கண்டறியப்பட்டது.

இவர் மீது இதுவரை குற்றச் சாட்டுகள் எதுவும் பதிவாகவில்லை.



# கனடாவில் கூடிச் செல்லும் சராசரி வாடகைத் தொகை

கனடாவில் சராசரி வாடகைத் தொகை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் சராசரி வாடகைத் தொகை 2,200 டொலர்கள் எனப் பதிவாகியுள்ளது.

வீட்டுமனை தொடர்பான நிறுவனங்களினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வாடகைத் தொகை 5.9 வீதத்தினால் அதிகரித் துள்ளது.

பெருந்தொற்றுக் காலப் பகுதியில் வாடகைத் தொகைகளில் வீழ்ச்சி பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக் கது.

பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் ஒன்றாரியோ தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் வாடகைத் தொகை அதிகரித்துள்ளது.

சஸ்கற்றுவானில் கடந்த ஆண்டு டன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வாடகைத் தொகை 22.2 வீதத்தினால் அதிகரித்துள்ளது.



# பிறம்டன் நகரில் காணாமல் போன தமிழரை கண்டுபிடிக்கும் தேடுதல் முயற்சிகள் தீவிரம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட்09

பிறம்டன் நகரில் காணாமல் போன தமிழரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஜூலை 31ஆம் திகதி புதன்கிழமை முதல் 64 வயதான யோகராஜா காணாமல் போயுள்ளார் எனத் தேடப்படுகின்றார்.

இவரை கண்டுபிடிக்க பீல் பிராந்திய பொலிஸார் பொது மக்கள் உதவியை நாடி இருந்தனர்.

ஒரு வாரங்களாக கண்டுபிடிக்கப் படாத நிலையில், இவரை தேடும் முயற்சியில் பீல் பிராந்திய பொலிஸாருக்கு யோர்க பிராந்திய பொலிஸார் உதவி வருகின்றனர்.

காணாமல் போன தினமன்று யோகராஜா மாகாண உரிமத் தகடு CFAZ 745 கொண்ட 2019 Grey Honda Odysseyவாகனத்தில் இவர் பயணித்தாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகனம் இறுதியாக செவ்வாய்க்கிழமை (06 ஆம் திகதி) கிங்சிட்டியில் காணப்பட்டதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும் அவரது குடும்பத்தினரும் அவரது பாதுகாப்பு குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

இவரை அல்லது குறிப்பிட்ட வாகனத்தை கண்டவர்கள் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.




# காட்டுத்தீச் சம்பவத்திற்கு காரணமான பெண் கைது

வான்கூவர் தீவுகளின் போர்ட் அல்பெர்னியில் உள்ள டெவில்ஸ் டென் ஏரிக்கு அருகே காட்டுத்தீயை ஏற்படுத்தியவர் என்சக் கூறப்படும் ஒரு பெண் கைது செய்யப்பட்டார் என போர்ட் அல்பெர்னி ஆர்.சி.எம்.பி. (பொலிஸ்) தெரிவித்துள்ளது.

27 வயதான இளம் பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ சம்பவத்திற்கு இந்தப் பெண்ணின் செயற்பாடே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பெண்ணுக்கு எதிராக பொலிஸார் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர்.

காட்டுத் தீ சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு பத்தாயிரம் டொலர்கள் வரையில் அபராதமும் ஓராண்டு கால சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு றொறன்ரோ சுற்றிவளைப்பில் பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்பு

றொறன்ரோவின் கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைத்துப்பாக்கிகள், போலி துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கித் தோட்டாக்கள் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

20 வயதான சந்தீப் சிங், 51 வயதான அமிர்க் சிங், 50 வயதான ஹார்பிரிட் கவுர் மற்றும் 29 வயதான ராஜ்வன்ட் கவுர் ஆகியோர் இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.